# நூலகம்

**அண்ணா நூற்றாண்டு நூலகம்**

அண்ணா நூற்றாண்டு நூலகம் தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள கோட்டூர்புரத்தில் உள்ளது. இது ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம் ஆகும். இது எட்டு அடுக்குகளைக் கொண்டது. இதன் பரப்பளவு எட்டு ஏக்கர் ஆகும்.

- **தரைத்தளம்**

இங்கு பார்வைத்திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது. அவர்களுக்காக பிரெய்லி நூல்களும் கேட்டு அறிய ஒலி வடிவ நூல்கள் குறுந்தகடுகள் வடிவிலும் உள்ளன. அவர்களுக்கு உதவி செய்ய பணியாளர்களும் உள்ளனர். இங்கு பிரெய்லி எழுத்தில் நூல்களை உருவாக்கும் கருவியும் படியெடுக்கும் வசதியும் உள்ளன.

1. **முதல் தளம்**
   இது குழந்தைகளுக்காகச் சிறப்பாக உருவாக்கப்பட்ட பகுதி. குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் படிப்பதற்காகச் செயற்கை மரம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்லூடகச் குறுந்தகடுகள் வைக்கப்பட்டுள்ளன. பிற நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு உள்ளன.
2. **இரண்டாவது தளம்**
   இங்கு தமிழ் நூல்கள் உள்ளன.
3. **மூன்றாவது தளம்**
   கணினி அறிவியல், தத்துவம் மற்றும் அரசியல் நூல்கள் உள்ளன.
4. **நான்காவது தளம்**
   பொருளியல், சட்டம், வணிகவியல் மற்றும் கல்வி நூல்கள் உள்ளன.
5. **ஐந்தாவது தளம்**
   கணிதம், அறிவியல் மற்றும் மருத்துவ நூல்கள் உள்ளன.
6. **ஆறாவது தளம்**
   பொறியியல், வேளாண்மை மற்றும் திரைப்பட கலை பற்றிய நூல்கள் உள்ளன.
7. **ஏழாவது தளம்**
   இங்கு அரசு கீழ் திசைச் சுவடிகள் நூலகம் உள்ளது. வரலாறு, புவியியல் மற்றும் சுற்றுலா நூல்கள் உள்ளன. இங்கு பழமையான ஓலைச்சுவடிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இங்கு அனைத்து வகை போட்டித் தேர்வுகளுக்கும் உரிய நூல்களும், மின் நூல்களும், மின் இதழ்களும் உள்ளன.
8. **எட்டாவது தளம்**
   நூலகத்தின் நிர்வாகப் பிரிவு மற்றும் கல்வி தொலைக்காட்சி அமைந்துள்ளன. நூலகம் முழுவதும் குளிர் பதன வசதி செய்யப்பட்டுள்ளது. இங்கு கூட்டரங்கு, கலையரங்கு கருத்தரங்கு கூடம், கண்காட்சி அரங்கு போன்றவையும் உள்ளன.

- **நூலகம் குறித்து அண்ணாவின் கூற்றுகள்**
  வீட்டிற்கோர் புத்தக சாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி சற்றுச் சிரமப்பட்டால், நமது நாட்டிலேயே நிச்சயமாக மனவளத்தைப் பெற முடியும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தை புத்தகசாலைக்கு தர வேண்டும்.

- வீடுகளில் நடைபெறும் விசேஷங்கள் மற்றும் பரிசளிப்புகளின் போது புத்தகங்களைத் தரும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

**வீட்டின் நூலகத்தில் இருக்க வேண்டிய புத்தகங்கள்**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய
www.tnpscgroup4.in

- பூகோள சரித ஏடுகள், சங்க இலக்கியங்கள், விஞ்ஞான கண்டுபிடிப்புகள் பற்றிய நூல்கள் இருக்க வேண்டும். வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்க வேண்டும்.
- நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலைதேசங்களை கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள் இருக்க வேண்டும்.

**அரசு செய்த சிறப்புகள்**

- 2009 ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது.
- 2010 ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்தது நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

**தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம்**

- இது இந்தியாவின் தொன்மையான நூலகங்களில் ஒன்று.
- கி.பி. 1122 முதல் இயங்கி வருகிறது.
- இங்கு தமிழ், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளின் ஓலை சுவடிகள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன.
- இரா. அரங்கநாதன் இவர் நூலக விதிகளை உருவாக்கியவர். **இந்திய நூலக அறிவியலின் தந்தை** என அழைக்கப்படுகிறார். சிறந்த நூல்களுக்கு டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் விருது வழங்கப்படுகிறது.

**நூலகத்தில் படித்து உயர்நிலை அடைந்தவர்களுள் முக்கியமானவர்கள்**

- அறிஞர் அண்ணா,
- ஜவஹர்லால் நேரு,
- அண்ணல் அம்பேத்கர்,
- காரல் மார்க்ஸ்.

**குறிப்புகள்**

- ✓ ஆசியா கண்டத்திலேயே மிகப்பெரிய நூலகம் சீனாவில் உள்ளது.
- ✓ ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்கு பாதுகாக்கப்படுகின்றன.
- ✓ உலகளவில் தமிழ் நூல்கள் அதிகம் உள்ள நூலகம் கன்னிமரா நூலகம். இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.
- ✓ இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் திருவனந்தபுரம் நடுவண் நூலகம். கல்கத்தாவில் 1836–ல் தொடங்கப்பட்டு 1953ல் பொதுமக்கள் பண்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப்பெரிய நூலகம் ஆகும். ஆவணக்காப்பக நூலகமாகவும் விளங்குகிறது.
- ✓ உலகின் மிகப்பெரிய நூலகம் அமெரிக்காவில் உள்ள லைப்ரரி ஆஃப் காங்கிரஸ் ஆகும்.
- ✓ நூலக பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கி தந்த சீர்காழி இரா. இரங்கநாதன் **இந்திய நூலக தந்தை** எனப் போற்றப்படுகிறார். சீர்காழி இரா.அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் 9ஆம் நாள் தேசிய நூலக நாளாகும்.
- ✓ உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே **– கதே.**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய
www.tnpscgroup4.in